# 22. சதானந்தவுந்தி.

*கட்டளைக்கலிப்பா.*

**பொ**ருளற் றார்பொரு ளுற்றவர் செய்பெரும்
புண்ணிய த்தைக்க ணுற்றிதி லென்பயன்
வருமி தைப்புரிந் தின்னும் பிறப்பையே
மண்ணின் மேவிடு வார்நமைப் போலொரு
கரும மேனுமின் ஞானம் பெறாரெனக்
கழறி யேயியை யாநடை கோடன்மெய்த்
தரும நீத்த பொறாமையன் றோவெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 1

**மு**ன்னை நல்வினை யாலிந்த ஞான்றுனை
முன்னித் தேம்ப லுறாச்சொல் லிலம்பகம்
என்னு மாலைக ணிற்கிடு வாரையவ்
வேசி னாவன்மை யில்லிகள் கண்டிதில்
என்னை யாகுமுன் னோர்பழம் பாட்டையே
யெடுத்தி யம்பல் பொதாதுகொ லென்றிகழ்
தன்னத் தாரழுக் காற்றிக லென்னெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 2

**உ**ணர்வு ளார்பண்டு வேத சிவாகம
வுண்மை யிற்றென வேவிரித் துள்ளநூல்
உணர்வி வேகந் தணந்தவ ரந்தநூ
லுணர்வு ளாரைக் குறித்திவ ருண்மையை
அணவிக் கண்டதுண் டோவென வேயிகழ்ந்
தறிவி லாமடப் பேதைய ராவதுந்
தணிவு றாக்கொடுங் கூரமன் றோவெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 3

1. **சத்தி** = வலிமை.

2. **தன்னத்தார்** = அற்பர்; தன்னம் = அற்பம்; **சூ - நிகண்டு.**

3. **கூரம்** = அழுக்காறு.

**நி**த்த மூர்த்தி தலந்திருத் தீர்த்தமா
னேடி யெய்துநற் புண்ணிய வாளரை
இத்த லத்திடைச் சோம்பு முலோபமு
மேறி னோர்கண் டிவர்க்குயர் வாகுநாம்
முத்தி ஞானத் துளோமென் றுயர்த்துதன்
மூட மும்பெரும் பாவமு மாமிறாச்
சத்து வக்கரு ணாநிதி யேயெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 4

**நூ**லி லேவிதிக் கும்விர தாதிக
ணோற்கு மாள்வினை கொண்டுடல் வாட்டியிஞ்
ஞால மீதுய் தவத்தரை யுண்பதே
ஞான மாக்கொண்ட வுன்மத்தர் நோக்கியித்
தூலந் தேய விழைத்திடு மாத்துமத்
துரோகத் தாலென்னை யாமிது மூடமே
சாலு மென்ப தகந்தையன் றோவெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 5

**சு**ருதி யாகம தூணமில் லாமலுஞ்
சுருதி யாதிய விந்தியச் சேட்டைகள்
மருவுறாமலு நல்லிரை துய்ப்பரை
மச்ச மூன்புசிப் பார்நிர்வி கற்பர்போற்
பெருகுங் காதைபல் பேசி யிகழ்ந்திடல்
பேர கந்தையுந் தீமையும் பீழையுந்
தருமெ னத்தெளி யாரெளி யாரெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 6

**ஊ**ன ருந்துவர் சேறருந் தார்நற
வுண்பர் காயுநெய் யுண்கிலர் தம்முளே
கோனி ருந்தகண் கோட னினைப்பர்கீழ்
கொண்ட நீசர்கண் கோட னினைத்திடார்

6. **தூணம்** = பகை; த்வேஷணம் என்னும் வடசொல்லின் விகாரம்.

7. **நறவு** = கள். **கண்மார்க்கம்** = கள்ளமார்க்கம்; கள் + மார்க்கம் எனப்பிரிக்க.

ஊன நெஞ்சத்தின் னோர்நிர்வி காரச்சொல்
லோத லென்னடு வென்னடு வீதடத்
தான மென்றகண் மார்க்கமன் றோவெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 7

**ப**ந்த வில்லந் துறந்துனை நாடிமெய்ப்
பாங்கி னிற்குமெய் யன்பரை யிக்கணே
எந்த ஞான்று மடந்தைமண் ணாடக
மென்னு நச்சொழி யார்கண்டிவ் வாறினோர்
வந்த தேனில் லகத்தின் றெனாவடம்
வழுத்த னன்னடை யாளரைப் பங்கிகழ்
சந்த மொக்குமன் றோதயை நாடெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 8

**அ**ந்த நாளின ராஞ்சுரு திப்பொரு
ளாவ தோர்ந்தணங் கோட்டிநின் றுய்ந்தனர்
இந்த நாளின ரவ்வரு நூலெனு
மேட்டைப் பல்பிர திக்குழு வாக்கியே
வந்த காசுக்கு விற்றுண் ணுழைப்பினின்
மல்கி வாசக ஞானமும் பேசுவார்
சந்த தப்பொருள் காண்பர்கொ லோவிவர்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 9

**உ**ண்மை நோக்குமிக் கார்நடை யிற்சதா
வொழுகத் தங்கட்கொல் லாதொழி வாயினும்
வண்மை கோணடை யாநெறி யெள்ளியே
மாப்ப வம்பெற னீத்துய்த னன்கெனா
வெண்மை மேவகில் லார்பகர் வாரன்றோ
வீடு பெற்றவண் ணாமலை நாதனின்
தண்மைத் தேமுகி லேகுக தெய்வமே
சத்தி ஞான சதானந்த வுந்தியே. 10

---

8. **வழுத்தல்** = சொல்லல்; இதுபற்றி யறிந்துகொண் முறையும், எடுத்துக் காட்டும் முதறபத்தின் "யாப்பூரினின்றுனடி" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கண் விளக்கப்பட்டுள, **பங்கு** = முடவன்.

9. **அணங்கு** = நோய்.